பெறுநர்.                                                                 15.07.2017

தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
பகிர்மான கழகம்,
சென்னை – 2

ஐயா,

பொருள் : நிர்வாகம் - டான்ஜெட்கோ -- பணியாளர்களின் விருப்ப மாறுதல் - வழிகாட்டுமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது தொடர்பாக.

பார்வை :

1) (Rt).CMD/TANGEDCO Proceedings No.5, Dated . 28.06.2017
2) எங்களது சங்கத்தின் 10.7.2017 தேதியிட்ட கடிதம்.
3) Memo.No.104992/1176/G43/G431/2017-2, dated14.07.2017.

--------------

புதிய விருப்பமாறுதல் வழிகாட்டு முறைகள் தொடர்பாக எங்களது சங்கத்தின் 10.7.2017 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டபடி

1) புதிய வழிகாட்டு முறைகள் 1.1.2018 முதல் அமுல் படுத்திடவும்,
2) அதுவரை தற்போதைய வழிகாட்டுமுறைகளை தொடர்ந்து பின்பற்றிடவும்,
3) பழைய விருப்ப மாறுதல் விண்ணப்பப் படிவங்களை அனுமதிப்பதற்கும்,
4) விருப்ப மாறுதல் விண்ணப்பங்கள் சமர்ப்பித்திட 25.7.2017 வரை கால நீட்டிப்பிற்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் புதிய வழிகாட்டு முறைகள் சம்மந்தமாக எங்களது சங்கத்தின் 10.7.2017 கடிதத்தினை தொடர்ந்து கீழ்காணும் சில கூடுதல் கருத்துக்களை தெரிவித்திட விரும்புகிறோம்.

பத்தி 5a இருக்கும் காலியிடம் / உருவாகும் காலியிடம் ஆகியவற்றிற்குத் தான் விருப்ப மாறுதல் ஏற்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. காலியிடம் இருந்தால்தான் விருப்ப மாறுதல் வழங்கமுடியும்.

-2-

உருவாகும் காலியிடம் என்ற வாசகம் சரியல்ல. உருவாகும் காலியிடம் என்பதற்கு காலவரை எதுவும் கிடையாது. எனவே ‘‘உருவாகும் காலியிடம்’’ என்ற வாசகம் சரியல்ல.

பத்தி 9 ஓராண்டு பணிக்காலம் முடிந்தால்தான் விருப்ப மாறுதல் கேட்க முடியும். எதற்காக இந்த விதி? என்று உத்திரவில் விளக்கியிருக்க வேண்டிய அவசியமில்லை. இல்லையெனில் உத்திரவில் கூறப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு விதிக்கும் அதற்கான அவசியத்தை விளக்கியிருக்க வேண்டும்.

பத்தி 9 (i)இனிமேல் மாறப் போகிறவர்களுக்கும் (are to be transferred) என்ற வாசகம் சரியா என்பதை பரிசீலிக்க வேண்டுகிறோம். ஏனெனில் விருப்ப மாறுதல் விண்ணப்பம் கொடுப்பது / வழங்குவது எல்லாம் அன்றைய தேதியில், அந்த இடத்தில் பணிபுரிபவர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

மேற்கண்ட ஷரத்துக்கள் ஏற்கனவே இருக்கும் CE/PersonnelMemo.No. 69140/IR.1(3)/96 -1 Adm.Br.dated 11.6.1996 -ல் உள்ளவைதான் என்பதை நாங்கள் மறுக்கவில்லை.

எனினும் தேவையில்லாதவற்றை, நடைமுறைக்கு ஒத்துவராததை, புதிய வழிகாட்டு முறைகளிலும் கொண்டு வருவது அவசியமில்லை என்று நாங்கள் கருதுகிறோம்.

ஆவண செய்திட வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர்.  17.07.2017

தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
பகிர்மான கழகம்,
சென்னை – 2

ஐயா,

பொருள் : தொழிற்சங்க உறவு – தொழிலாளர் பிரச்சனை குறித்து – காலமுறை பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்திட வேண்டுவது.

பார்வை : Chairman Circular Memo.11468/Adm.Br./IR-2(1)/84-5, dated 31.03.84

வாரியத்தில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களுடன், காலமுறை பேச்சு வார்த்தை நடத்துவதற்கான வழிகாட்டு முறைகளுக்கு, தெளிவான வாரிய உத்திரவு வழங்கப்பட்டிருந்தும், அண்மைக் காலமாக அவை செயல்படுத்தாமல் இருப்பது குறித்து வருந்துகிறோம்.

தொழிற்சங்கம் மற்றும் நிர்வாகம், தொழிலாளர் பிரச்சனை குறித்து மனம் திறந்து பேசிடவும், வாரிய நிர்வாகத்திற்கும், தொழிற்சங்கங்களுக்கிடையே ஆரோக்கியமான தொழிலுறவு நிலவுவதற்கும், ஆர்பாட்டம், காத்திருப்பு, முற்றுகை முதலிய பல்வேறு போராட்டங்களால் தொழிலமைதி, வாரியத்தின் நற்பெயர்

கெடாமல் இருப்பதற்கும், இத்தகைய இருதரப்பு பேச்சு வார்த்தைகள் உதவியாக இருக்கும் என நாங்கள் நம்புகிறோம்.

மேற்கண்டவைகளின் பின்னணியில் தொழிலாளர்களின் சில பிரச்சனைகளை தங்களது கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

1. SNLI பதவி உயர்வு சம்மந்தமாக வாரியஉத்திரவு எண்2,(Adm.Br.) நாள் 01.02.2017- சரியாகப் பொருள் கொள்ளுதல்
2. F.M. I Gr. to JE II Gr பதவி உயர்வு பெற்றுள்ள சீனியர்களுக்கும் Spl.Gr.F.M. tp JE II Gr பதவி உயர்வு பெறும் ஜூனியர்களுக்கும் உள்ள தர ஊதிய வேறுபாடுகளை களைதல்
3. பகுதி நேர மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களின் பிரச்சனைக்கு சுமூகத்தீர்வு காண முயற்சித்தல்
4. புதிய விருப்ப ஊர் மாறுதல் வழிகாட்டு முறைகளை தெளிவாக்கிடுதல்

மேற்கண்ட முக்கியமான, தொழிலாளர்களை மிகவும் பாதிக்கக்கூடிய, பிரச்சனைகள் மீது எங்கள் சங்கத்தின் கருத்துக்களை தெரிவிப்பதற்கும், நிர்வாகத்தின் பதிலை அறிந்து கொள்வதற்கும், ஏதுவாக நிர்வாகத்திற்கு வசதிபடும் நாளினையும், நேரத்தையும் விரைவில் ஒதுக்கித் தருமாறு வேண்டுகிறோம்.

தங்களது ஒத்துழைப்பிற்கு நன்றி.

தங்கள் உண்மையுள்ள,

பொதுச்செயலாளர்